# நாணயச் சபை

# இலங்கை மத்திய வங்கி

**2018 திசெம்பர் 03 | நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் | 2018இன் 10ஆம் இலக்கம்**

## நுண்பாக நிதிக் கடன்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதம்

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான நுண்பாக நிதிக் கடன்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதம் தொடர்பில் நாணயச் சபை பணிப்புரைகளை விடுத்திருக்கிறது.

1. பிரயோகத்தன்மையும் செயற்பரப்பும்

1.1 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட நுண்பாக நிதிக்கடன் தொடர்பில் வாடிக்கையாளர்கள் மீது மிக கடுமையான வட்டி வீதம் விதிக்கப்பட்டு வருவதிலிருந்தும் அவர்களை பாதுகாக்கும் குறிக்கோளுடன் நுண்பாக நிதிக் கடன்கள் மீது உயர்ந்தபட்ச வட்டி வீதம் இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்டது.

1.2 இப்பணிப்புரையானது, இப்பணிப்புரையின் திகதியிலிருந்து வழங்கப்பட்ட அனைத்து நுண்பாக நிதிக் கடன்களுக்கும் ஏற்புடைத்தானதாக இருக்கும்.

2. வட்டியின் உயர்ந்தபட்ச வீதம்

2.1 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், நுண்பாக நிதிக் கடன்கள் மீது மற்றைய அனைத்து விதிப்புக்களும் உட்பட ஆண்டொன்றிற்கு 35 சதவீதத்தினை விஞ்சுகின்ற விதத்தில் விதிப்புக்கள் எதனையும் விதித்தலாகாது.

3. நுண்பாக நிதிக் கடன்களின் வரைவிலக்கணம்

3.1 நுண்பாக தொழில்முயற்சிகளை உருவாக்குகின்றமை மற்றும் முகாமைப்படுத்துகின்றமைக்கான கடன்கள் உட்பட, வருமான உருவாக்க நடவடிக்கைகளுக்காக தனிப்பட்டவர்களுக்கு/ குழும கடன் வழங்கல் முறைமையின் கீழுள்ள தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள்.

4. அறிக்கையிடும் தேவைப்பாடுகள்

4.1 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், நுண்பாக நிதிக் கடன்களை குறியீடு 1.1.4.12.0.0 - நிதியியல் தகவல் வலையமைப்பிலுள்ள நுண்பாக நிதிக் கடன்கள் (பின்நெட்) கூற்று என்பிடி-எம்எவ்-01-பீஎஸ் ஐந்தொகையின்கீழ் அறிக்கையிடுதல் வேண்டும்.

5. விளக்கங்கள்

5.1 “நுண்பாக தொழில்முயற்சிகள்” என்பது ரூ.15 மில்லியனுக்குக் குறைவான வருடாந்த மொத்தப் புரள்வினையும் 10 இற்கும் குறைவான ஊழியர்களையும் கொண்டுள்ள தயாரிப்பு மற்றும் பணிகள் துறையிலுள்ள தொழில்முயற்சிகள் எனப் பொருள்படும். (மூலம்: கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சினால் வழங்கப்பட்ட சிறிய, நடுத்தர தொழில்முயற்சி அபிவிருத்திக்கான தேசிய கொள்கைக் கட்டமைப்பு).

**முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி**
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்